IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 63/2019 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Karuppasamy | CASTE | : | |
| S/O. / W/O. | Kuppaiyandi | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **05-04-2023**

குறுக்கு விசாரணை (பி.வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) : 05-04-2023**

தாவா பிராதிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விபரம் சொன்னது யார் என்றால் நான் தான். எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை உங்களால் படித்து பார்த்து தெரிந்து கொண்டிர்களா என்றால் தெரிந்து கொண்டேன். வாதி குப்பையாண்டி உங்களுக்கு என்ன உறவுமுறை வேண்டும் என்றால், வாதி குப்பையாண்டி எனக்கு பங்காளி முறை வேண்டும். வாதியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால், சிறு வயது முதலே எனக்கு தெரியும், வாதியின் அம்மா, அப்பா ஆகியோர்கள் அனைவரையும் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள விபரங்களை உங்களது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் எத்தனை சொத்து விபரங்கள் குறிப்பிட்டுள்ளார் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு நன்றாக தெரியும், தாவா சொத்து விபரங்களில் கண்டுள்ள சர்வே எண்கள், விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது, படிப்பறிவு கிடையாது.

வாதி வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விபரமான சர்வே எண்.80/6A2க்குண்டான பழைய சர்வே எண் விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆதியில் சர்வே எண்.80/6A2 சொத்து யாருக்கு சொந்தமானது என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால், பாட்டானருக்கு பாத்தியப்பட்டதாகும்.

பாட்டானார் பெயர் தெரியாது. உங்களால் சொல்லக்கூடிய பாட்டனாருக்குண்டான சொத்து தொடர்பான ஆவணங்களை பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்களால் தாக்கல் செய்யப்பட்ட நிருபண வாக்குமூலத்தில், தாவா சொத்துக்கள் உங்களது பாட்டனாருக்கு பாத்தியப்பட்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தெரியாது. உங்களால் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளில் சிலவற்றை உங்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அது சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி